விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 22 திங்கட்கிழமை (05.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 48

ராம்கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து



சுதந்திரதின நிகழ்வுக் காட்சிகளில்.



# தமிழ்க்கூட்டமைப்பை அரசில் இணையுமாறு

# ஜனாதிபதி மகிந்த பகிரங்க அழைப்பு



## சுதந்திர தின உரையில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் தமிழ்மக்களை அச்சுறுத்தல்களிலிருந்து மீட்பதற்கும், வடக்கில் விடுதலையை உதயமாக்கிக் கொள்வதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அரசில் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அரசுடன் இணைந்து கொண்டால் மட்டுமே விடுதலையை உதயமாக்கிக் கொள்ளலாம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நேற்று காலிமுகத்திடலில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இப் பகிரங்க அழைப்பை விடுத்துள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தத்திற்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கிக்கு நெகரிவ் வகையான இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி உமாசங்கர் அறிவித்துள்ளார்.

மேற்குறித்த வகையான குருதி முடிபடைந்துள்ளதால் அவசர சிகிச்சைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த

(04 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வகட்சிக்கூட்டங்களுக்கு அழைக்காத ஜனாதிபதி அரசில் இணைய அழைக்கிறார்

## ஆச்சரியமாக உள்ளது என்கிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்ததொரு சர்வகட்சிக்கூட்டத்திற்கேனும் அழைப்பு விடுக்காத ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசுடன் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச சமூகத்திற்கு தாம் ஒரு சமாதான விரும்பி எனத் தெரிவித்து உதவிகளை பெறுவதற்காகவே தமது அரசுடன் இணையுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார் என அக்கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது 59 ஆவது சுதந்திர தின உரையில் தமிழ்த்தேசியக்கூட்ட

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீழ்ந்து வெடித்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததில் இருவர் காயமடைந்துள்ளனர். இத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுக் காலை 7.30 மணிமுதல் இயக்கச்சி, பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளை நோக்கி இராணுவத்தினரால் ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரதினத்தை முன்னிட்டு யாழில் தேசியக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன

### இராணுவ பாதுகாப்பும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 59 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு யாழ்.நகரிலும், புறநகர்ப்பகுதிகளிலும் நேற்று தேசியக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்ததை நன்கு அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இதேவேளை வழமைபோல் யாழ்.செயலகத்திலும் அரச அதிபரால் செயலக முகப்பில் தேசியக்கொடி ஏற்பட்டிருந்தது. குடாநாட்டில் இராணுவத்தி

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நேற்று கோலாகலமாக நடந்தன

(கொழும்பு)

இலங்கையில் 59 ஆவது சுதந்திர தின கொண்டாட்டம் நேற்று பலத்த பாதுகாப்பு மத்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் காலிமுகத்திடலில் மிகவும் கோலாகலமாக இடம் பெற்றுள்ளது.

முப்படையினரும் கூட்டுப்படையினரும் சேர்ந்து 3 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட படைவீரர்கள் கனரக ஆயுதங்களுடனும் இராணுவ

(04 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(சென்னை)

கோடியக்கரை கடற் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக இந்திய மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள் பிடித்திருந்த மீன்களையும் கடற்படையினர் பறித்துச் சென்று விட்டதாக கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர்கள் படையணியில் சேர்க்கப்படுவதை அரசியல் ஆயுதமாக்க முற்படுகின்றது அரசு

## விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

படையணிகளில் சிறுவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவது குறித்த குற்றச்சாட்டுக்கள் சிறுவர்களின் உரிமைகளுடன் தொடர்புடைய விடயமாக அல்லாது, அரசியல் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வருவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது குறித்து நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குறித்து எதிர்வரும் 8 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் இடம் பெறவுள்ள மாநாட்டின்போது பக்கசார்பான தகவல்களை கொண்ட அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறுவர் ஆட்சேர்ப்புக்களை தடுப்பதற்கு நடைமுறைக்கு

(04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அடுத்த வாரம் நாடு திரும்புகிறார்



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த வாரம் நாடு திரும்பவுள்ளார். கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்புத் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் தோன்றியுள்ள நெருக்கடியான நிலையில் இவர் நாடு திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்பில் விசனம் அடைந்த பல சுதந்திரக் கட்சி அமைச்சர்களுடன் சந்திரிகா தொலைபேசியில் கலந்துரையாடியதுடன் அவர்களை மிகக் கவனமாக இருக்கும்படியும் அவசரப்பட்டு அரசியல் முடிபுகளை எடுத்துவிட வேண்டாம் என்வும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய பாரம்பரிய அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க உட்பட பல அமைச்சர்களுக்குப் பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டாம் எனவும் மகிந்த எடுக்கும் முடிபுகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கும்படியும் ஆலோசனைகளையும் சந்திரிகா கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# கின்னஸ் சாதனையில் இலங்கை அமைச்சரவை?

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட மிகப் பெரிய அமைச்சரவை உலக சாதனைகளைப் பதியும் கின்னஸ் புத்தகத்தில் இந்த வாரம் பதியப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் கடந்த வாரம் 54 அமைச்சர்கள், 20 பிரதியமைச்சர்கள், 34 அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவை அமைக்கப்பட்டிருந்தது.

உலக நாடுகளில் உள்ள அமைச்சரவையில் தற்போது இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவையே மிகப் பெரியதாகும். 1.3 பில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சீனாவில் 24 அமைச்சர்களும் ஒரு பில்லியனை விட அதிகளவில் சனத்தொகையைக் கொண்ட இந்தியாவில் 30ற்கும் குறைவான அமைச்சர்களுமே உள்ளனர்.

இந்த வாரம் உலக கின்னஸ் சாதனை நிறுவனத்திற்கு இலங்கையிலுள்ள உலகில் மிகப் பெரிய அமைச்சரவை தொடர்பாக கடிதம் ஒன்றை எழுதப் போவதுடன் அது கின்னஸ் சாதனையில் இடம்பெற பரிந்துரை செய்யப் போவதாகவும் ஐ.தே.கவின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ச)

# கொலைக் குற்றவாளிகளுக்கு கட்டாரில் மரண தண்டனை

(கட்டார்)

கட்டாரில் தொழில் செய்து வந்த தமிழ் இளைஞர் ஒருவரை கொலை செய்த குற்றத்துக்காக ஐவருக்கு கட்டார் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மனோகரன் எனும் 25 வயதுடைய இளைஞர் கடந்த வருடம் கட்டாரில் வைத்து இரும்புக் கம்பியால் தாக்கிக் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக ஐவர்மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது. இதனடிப்படையில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

ஒருவர் தலை மறைவாகி பின்னர் வேறு நாடொன்றுக்குத் தப்பிச் சென்றதாக அறிவிக்கப்படுகின்றது. (ச)

# சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பில் 300 பேர் கைது

இலங்கையின் 59-வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது நேற்று வரை 300ற்கும் அதிகமான தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் பெருமளவான மக்கள் கொழும்புக்கோட்டை மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தத் தவறியதுடன் அந்தப் பிரதேசத்தில் தங்கியிருப்பதற்கான காரணத்தையும் தெரிவிக்கத் தவறிவிட்டனர் என கொழும்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் பொலிஸ் நிலையங்களில் வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

மேலும் சனிக்கிழமை கோட்டைப் பகுதியில் கைது செய்யப்பட்ட 266 தமிழ் மக்களில் 70 பேர் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மாலியாவத்தையில் கைப்பற்றப்பட்ட கிளைமோர்க் குண்டு தொடர்பாகவே இவர்கள் விசாரிக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# நெல் அறுவடை ஆரம்பம்

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுகளில் பருவ கால நெல் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆங்காங்கே காணப்படும் ஒரு சில வயல்களிலேயே நெல் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த கால விளைச்சலுடன் ஒப்பிடுகையில் இம்முறை நெல் விளைச்சல் பாரிய வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் இதற்குக் காரணம் பருவ நேரத்தில் போதியளவு வளமாக்கிகள் இடப்படாமை மற்றும் மழை வீழ்ச்சியின்மை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் நெற்செய்கைக்குத் தேவையான உரம் உட்பட வளமாக்கிகளுக்கு குடாநாட்டில் பாரிய தட்டுப்பாடு நிலவியதோடு மழை வீழ்ச்சியும் வெகுவாகக் குறைந்திருந்தமை தெரிந்ததே. (ச-49)

## வடக்கு - கிழக்கில் உள்ள

# பல்கலைக்கழகச் செயற்பாடுகளை அமைதியாகத் தொடர நடவடிக்கை

## பிரதி உயர் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் அண்மைக்காலமாக நிலவிவரும் ஒரு குழப்பமான சூழ்நிலையை நீக்கி மாணவர்கள் சமாதானமாகவும் அமைதியாகவும் தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒத்துழைப்புடன் உரிய நடவடிக்கைகளினை எடுக்கவுள்ளதாக பிரதி உயர் கல்வி அமைச்சர் எம்.எம்.முஸ்தபா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கல்முனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். பல்கலைக்கழக நிர்வாகங்களும் விரிவுரையாளர்களும் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தமது செயற்பாடுகளை சீராக ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டுமென அவர் கூறினார்.

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்திற்கு அமைய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு அநேகமான மாணவர்கள் பட்டதாரிகளாகக் கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் இதனை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-3)

# ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருந்துக்குப் பாரியதட்டுப்பாடு

வலி.மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களான வட்டுக்கோட்டை மற்றும் அராலி ஆகிய அலுவலகங்களில் இயங்கி வரும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருந்துப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விரு வைத்தியசாலைகளிலும் தினமும் நூற்றுக் கணக்கானோர் சிகிச்சை பெற வருகின்றனர் எனவும் இதனால் கையிருப்பிலுள்ள மருந்துப் பொருள்கள் நாளுக்கு நாள் குறைவடைந்து வரும் நிலையில் மருந்துப் பொருள்களுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகச் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-49)

# இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா

வண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரகாளி அம்மன் கோவில் இராஜகோபுர அடிக்கல் நாட்டு வைபவம் நாளை மறுதினம் காலை 8.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் வைபவத்தில் நல்லையாதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசி உரை நிகழ்த்தவுள்ளார். (ச)

# அதிதொழில் நுட்பங்களுடன் கூடிய ஆயுத உற்பத்தி நிலையம் முற்றுகை

(கொழும்பு)

அதிதொழில் நுட்பங்களுடன் கூடிய ஆயுத உற்பத்தி நிலையம் ஒன்று வலியத்த அகுல்மடுவப் பிரதேசத்தில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுற்றிவளைப்புத் தேடுதலை நேற்று முற்பகல் பொலிஸார் மேற்கொண்ட போது இவ்வாயுத உற்பத்தி நிலையம் கண்டுபிடிக்கப்பட்டதாக வலியத்தப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாயுத உற்பத்தி நிலையங்களிலிருந்து பேனா வடிவிலான கைத்துப்பாக்கிகள் ஒன்றும் அதற்குப் பயன்படும் தோட்டக்கள் மற்றும் ஆயுத உற்பத்திக்கான இயந்திரங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த நிலையத்திலிருந்து 40கைத் துப்பாக்கிகள் உற்பத்தி செய்யப்பட்டு அவை விற்பனை செய்யப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

# 'தேசத்திற்கு மௌனம்' கலாசாரக் கண்காட்சி

(கொழும்பு)

புதிய இலங்கையை உருவாக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'தேசத்திற்கு மௌனம்' எனும் தொனிப்பொருளிலான கலைகலாசார கண்காட்சியினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுத் திறந்து வைத்தார்.

59-வது சுதந்திர தினத்தையொட்டி இந்த விசேட கண்காட்சி கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறுகின்றது.

இந்தக்கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள வரலாற்றின் அனைத்து யுகங்களையும் சித்தரிக்கும் ஓவியங்கள் உள்ளன. இக் கண்காட்சியில் அரசாங்கம் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த திணைக்களங்களும் பங்குபற்றுகின்றன.

இலத்திரனியல் மற்றும் அச்சுஊடக நிறுவனங்களின் கண்காட்சிக் கூடங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)


## மரண அறிவித்தல்

**திருமதி பிச்சாடனக் குருக்கள் சீதாலெட்சுமியம்மா**

நீர்வேலி வாய்க்காற்றலை பிள்ளையார் கோவில் ஆதினகர்த்தரும், காலஞ்சென்றவருமான சிவஸ்ரீ பிச்சாடனக்குருக்கள் அவர்களின் மனைவியுமான திருமதி சீதாலெட்சுமியம்மா 04.02.2007-ந் திகதியன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கொழும்பில் சிவபதமடைந்துள்ளார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 05.02.2007-ல் கொழும்பில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

T.P. 0112 811721
T.P. 0114 517450
T.P. 077 377450

தகவல்,
குடும்பத்தினர்

(612)


# சிறைச்சாலைகளிலிருந்த 1400 கைதிகள் விடுதலை

59-வது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஆயிரத்து 400 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறிய குற்றச் செயல்களுக்காகச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டதாகச் சிறைச்சாலை ஆணையாளர் குணரட்ன குரூப் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து 400க்கும் மேற்பட்ட கைதிகள் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இரண்டு சிறுவர்கள் உட்பட 28 பெண்களும் அடங்குவர்.

அபராதத் தொகைச் செலுத்தத் தவறியதன் காரணமாக சிறைவாசம் அனுபவித்து வந்த ஒரு சிலரும் விடுதலை செய்யப்பட்டதாக வெலிக்கடைச் சிறைச்சாலையின் சிரேஷ்ட அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை போகம்பர, மகர, நீர்கொழும்பு, அநுராதபுரம் உள்ளிட்ட சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவித்து வந்த பலரும் விடுதலை செய்யப்பட்டனர்.

போகம்பர சிறைச்சாலையில் இருந்து 9பெண்கள் உட்பட 217 பேரும் அநுராதபுரச் சிறைச்சாலையிலிருந்து 201 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ச-3)

'ஒரு நாட்டில் அறிவிருக்க வேண்டிய இடத்தில் அதிகாரம் அமரத் தொடங்கிவிட்டால் அதன் பிறகு அது முன்னால் வந்து அந்த நாட்டைப் படுகுழிக்குள் இழுத்துச் சென்றுவிடும். இது வரலாற்றுச் சுவடி தெரிவிக்கும் பாடம்.'

—இங்கர்சால்

வலம்புரி

## ஜனாதிபதி மகிந்த விடுத்த கோரிக்கை பொறுப்பற்ற செயலின் அளவீட்டுக் கருவி

ஆயுதங்களைக் கையளித்துவிட்டு விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாகரைப் பகுதிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அங்கு வைத்து மேற்போந்த கோரிக்கையை விடுத்துள்ளார் என்ற செய்தி இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

போர் நடந்த பூமியாக இருக்கக் கூடிய வாகரைக்குச் சென்றதன் மூலம் தனது அரசியல் பலத்தை மேலும் ஒருபடி உயர்த்திக் கொள்ள முற்பட்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது வாகரைப் பயணத்திற்கு அதீத முக்கியத்துவம் கிடைக்க வேண்டுமெனக் கருதினார் போலும்.

அதற்கு இருக்கக் கூடிய ஒரே வழி நடைமுறைக்குச் சாத்தியமற்றதும், சமாதானத்தை வலியுறுத்துவதுமான கோரிக்கையை முன்வைப்பதென அவர் முடிவு செய்திருக்கலாம்.

அவ்வாறான முடிபிலேயே ஆயுதங்களைக் கையளித்துவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் முன்வர வேண்டுமென அவர் கேட்டிருக்கலாம்.

ஏனெனில், ஆயுதங்களைக் கையளித்து விட்டு விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருவதென்பது கனவிலும் நடைபெற முடியாத ஒன்று.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். அப்படியிருந்தும் நடைமுறைக்குச் சாத்தியப்படாத கோரிக்கையை முன்வைப்பது எதற்காக என்ற கேள்வி பொதுமக்களிடையே எழவே செய்யும்.

அதன் வழியில் ஆராய்ந்தால் இராணுவத்தினர் கைப்பற்றியதாகக் கூறப்படும் வாகரையில் நின்று கொண்டு ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் எனக் கேட்டது பெறுமானமுடைய தென ஜனாதிபதி மகிந்த கருதியிருக்க வேண்டும் என்ற முடிபுக்கு நாம் வரலாம்.

ஆக, இராணுவப் பலத்தை அதிகரிப்பதிலும் படை நகர்வுகள் இராணுவ வெற்றி என்பதைக் காட்டுவதும் இதன் உள்நோக்கமாகும். நாட்டில் போர் நடப்பதும் இருதரப்பில் ஏதோவொரு தரப்பு குறிப்பிட்ட பிரதேசங்களைத் தமது கட்டுபாட்டிற்குள் கொண்டுவருவதும் அன்றுமுதல் இன்று வரை நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது.

இதில் வீராப்புப் பேசுவதில் அர்த்தமில்லை. இன்று கைப்பற்றிய பிரதேசம் நாளை இன்னொரு தரப்பால் கைப்பற்றப்படலாம். சுருங்கக் கூறின் 'இன்று உன்னுடையதாக இருக்கின்ற பொருள் நாளை மற்றொருவனுடையதாகின்றது' என்ற பகவத் கீதையின் போதனை இருதரப்புக் கட்டுப்பாட்டு எல்லைகளில் சாத்தியப்படுகின்றது.

எனவே சமாதானம் என்ற உயர்சிந்தனைக்கு நிபந்தனை என்பது தடையாகவே அமையும். அதே நேரம் நாட்டின் கடந்த கால ஜனாதிபதிகளும் பிரதமர்களும் முக்கிய அமைச்சர்களும் கேட்காத ஒன்றை ஜனாதிபதி மகிந்த இப்பொழுது கேட்டுவிடவில்லை.

அவர்களும் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு கேட்டனர். தாம் கேட்பது இப்பிறப்பில் சாத்தியமாகாது என்பதை தெரிந்து கொண்டும் அவர்கள் விட்ட அதேதவறை ஜனாதிபதி மகிந்தவும் இப்போது விடுக்கின்றார்.

ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்ற கோரிக்கை உலகை ஏமாற்றும் உபாயமாக உரியவர்கள் கொள்ளலாமே தவிர இலங்கை மக்களைப் பொறுத்தவரை அந்தக் கோரிக்கை பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களின் பொறுப்பற்றதன்மையைக் காட்டும் அளவீடாகவே கொள்ளப்படும்.

# இலங்கையில் அமைதி ஏற்படும் வரை உதவித் தொகைகளை நிறுத்தத் திட்டம்

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் தென்படும் வரை உதவி வழங்கும் நாடுகள் உதவித் தொகையை வழங்கப் போவதில்லை என உதவி வழங்கும் நாடுகள் முடிபெடுத்துள்ளன.

மேலும் முதலில் அவர்களால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளையும் மீளப்பெற்றுக் கொள்ளும் நிலைக்கும் உதவி வழங்கும் நாடுகள் வந்துள்ளார்கள் என ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காலியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அரசை அமைதி முயற்சிகளில் ஈடுபட வைப்பதற்காகவே கூட்டப்பட்டது. எனவேதான் உதவி வழங்கும் நாடுகள் நிதியை வழங்கப்போவதாக ஒத்துக் கொள்ளவில்லை.

அதாவது அரசு விரைவாக பேச்சுக்களின் மூலம் இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதே மாநாட்டின் நோக்கம் என உலக வங்கியின் ஆசியா பிராந்திய உதவித் தலைவர் ராபூல் பட்டேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த வாரம் காலியில் நடைபெற்ற மாநாட்டில் உதவித் தொகை வழங்குவது தொடர்பாக முடிபெடுக்கப்படவில்லை. ஆனால் அரசு, விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை நிகழ்த்தி இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்த தீர்வைக் காண வேண்டுமென அழுத்தம் கொடுக்கப்பட்டது.

காலியில் நடைபெற்ற மாநாடு இலங்கைக்கான உதவித் தொகையை வழங்கும் மாநாடாகவிருந்தால் உதவி வழங்கும் நாடுகள் குறிப்பிட்ட தொகையை வழங்கச் சம்மதித்திருந்தால் மாநாட்டின் முடிபில் இலங்கையும் உதவி வழங்கும் நாடுகளும் இணைந்து கூட்டாக அறிக்கையை வெளியிட்டிருப்பார்கள்.

உதவி வழங்கும் நாடுகள் பயங்கரவாதத்தையும் அபிவிருத்தியையும் வேறாகப் பார்க்க முயற்சிக்கவில்லை. மாறாக இலங்கையில் அமைதியையும் உறுதித் தன்மையையும் ஏற்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான எமது செயற்பாடுகள் ஒரு உதவியாக அமையலாம். அமைதி முயற்சிகளை உறுதிப்படுத்த நாம் சில நடவடிக்கைகளை எடுக்கலாம். உதாரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யலாம்.

அரசு யாருடன் பேசுகின்றது என்பது முக்கியமல்ல. அரசு என்ன தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கப்போகின்றது என்பதுதான் முக்கியமானது. அரசு முக்கியமான தரப்புடன் பேசி ஒரு தீர்வைக் காண வேண்டும்.

உதவி வழங்கும் நாடுகள் அரசிடம் ஒரு தெளிவான தீர்வுத் திட்டத்தைக் காண்பிக்குமாறு கேட்டிருந்தார்கள். ஆனால் அரசு அதைச் செய்வதில் அக்கறையுடன் செயற்படவில்லை. இதுதான் அரசாங்கத்தின் இயல்பான நிலையாக உள்ளது.

காலியில் நடைபெற்ற மாநாட்டிலிருந்து உதவி வழங்கும் நாடுகள் வெளிநடப்புச் செய்தார்களா? என்று நீங்கள் கேட்டால் எனது பதில் இல்லை என்பதே. ஆனால் நாங்கள் என்ன கூறுகின்றோம் என்றால் நேபாளத்தில் ஒரு தீர்வை எட்ட முடியும் என்றால் ஏன் இலங்கையில் முடியாது?

உலகம் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. போட்டியாளர்கள் சந்தைகளை கைப்பற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இங்கு நிலைமைகள் முன்னேற்றமின்றிக் கிடக்கின்றன.

எனது கடைசி விஜயத்தின் போது வடக்கிலிருந்த நிலைமைகளில் இன்றும் முன்னேற்றமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இலங்கையிலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற மூன்று படகோட்டிகள் கைது; மூவர் தப்பினர்

(இராமேஸ்வரம்)

இலங்கையிலிருந்து தனுஷ்கோடி, அரிச்சல்முனை கடற்கரை மற்றும் மண்டபம் பகுதிகளுக்கு 53 அகதிகள் சனிக்கிழமை சென்றுள்ளனர்.

அவர்களைஏற்றி வந்த மூன்று படகோட்டிகளை தனுஷ்கோடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் பயன்படுத்திய இரு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. திருகோணமலை , வவுனியாப் பகுதிகளிலிருந்து 23 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆண்கள், 14 பெண்கள், 5 ஆண் குழந்தைகள், 9 பெண் குழந்தைகள் என மொத்தமாக 53 பேர் படகுகளில் சென்றுள்ளனர்.

மன்னார் கடற்கரையிலிருந்து புறப்பட்ட அவர்களை தனுஷ்கோடி அரிச்சல்முனை மற்றும் மண்டபம் தென்கடல் பகுதிக்கு வந்துள்ளனர். இவர்களை இந்தியக் கடற்பகுதியில் இறக்கிவிட்டு படகுகள் திரும்பிச் சென்று கொண்டிருந்த போது இந்தியக் கடற்படையினர் இவ்விரு படகுகளையும் சுற்றிவளைத்து பிடித்துள்ளனர்.

இதிலிருந்த படகோட்டிகள் ஆறுபேரில் மன்னாரைச் சேர்ந்த மூன்று பேரை கடற்படையினர் பிடித்தனர். மற்றைய மூன்று படகோட்டிகள் கடலில் குதித்துத் தப்பி விட்டனர். அகதிகள் மற்றும் மூன்று படகோட்டிகள் பயன்படுத்திய இரண்டு படகுகளையும் கடற்படையினர் தனுஷ்கோடிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் கடலில் குதித்துத் தப்பிச் சென்ற மூன்று படகோட்டிகளை கடற்படையினரும் கடலோரக்காவற்படையினரும் தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்குப்பின் அகதிகளை மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைத்துள்ளனர். (எ-5)

# இந்திய வம்சாவளியினர் 8 பேர் அமைச்சர்களாக நியமனம்!

ஜனாதிபதியினால் கடந்த வாரம் மறுசீரமைக்கப்பட்ட அமைச்சரவையில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆறு பேருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எட்டுப் பேர் அமைச்சர்களாகினர். இ.தொ.கா.தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இளைஞர் வலுவூட்டல்மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக சமத்துவமின்மையை நீக்குவதற்கான அமைச்சராகவும் சி.பி.ரட்னாயக்க கால்நடை அபிவிருத்தி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இம்மூவரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் ஆவர். இவர்களோடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முத்துசிவலிங்கம் தோட்ட உட்கட்டமைப்பு பிரதியமைச்சராகவும் எஸ்.ஜெகதீஸ்வரன் தேசிய ஒருமைப்பாட்டு பிரதியமைச்சராகவும் நவீன் திஸாநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

புதிய அமைச்சரவையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எட்டுப் பேர் இடம்பெற்றுள்ளார்கள். அவர்களின் விபரம் வருமாறு,

ஆறுமுகம் தொண்டமான், பெ.சந்திரசேகரன், முத்துசிவலிங்கம், எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோரோடு எம்.எஸ். செல்லச்சாமி தபால் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சராகவும் எம்.சச்சிதானந்தன் கல்வி பிரதி அமைச்சராகவும் வடிவேல் சுரேஷ் சுகாதாரப் பிரதி அமைச்சராகவும் பெ.இராதாகிருஷ்ணன் தொழில்பயிற்சி பிரதி அமைச்சராகவும் நியமனம் பெற்றுள்ளார்கள்.

தேசிய ரீதியில் அமைச்சர்கள் தொகை அதிகரிக்கப்பட்டுள்ள நேரத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமைச்சர்களின் தொகை அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# விஷ வாயு தாக்கி இளைஞர்கள் மரணம்

(கொழும்பு)

இரத்தினபுரி பட்டுகெதர பகுதியில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட இரு தமிழ் இளைஞர்கள் விஷ வாயு தாக்கி மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்துள்ளவர்கள் ஒப்புநாயக்க இளுக்கும்புரத் தோட்டத்தைச் சேர்ந்த காளிமுத்து கிருஷ்ணமூர்த்தி(வயது-26), முருகேசு பாலசுப்பிரமணியம் (வயது-25) என இரத்தினபுரி வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களது சடலங்கள் இரத்தினபுரி அரச வைத்தியசாலை சவச்சாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்ததுடன் இரத்தினபுரி நகர திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எல்.விஜேரத்ன மரண விசாரணையை நடத்தினார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

நேற்று அதிகாலை 2 மணியளவில் இரத்தினக்கல் அகழ்வதற்கான நீர்வசதியை பெறுவதற்காக இரத்தினக்கல் அகழ்வு பாழடைந்த குழியினுள் காளிமுத்து கிருஷ்ணமூர்த்தி என்பவர் இறங்கியதையடுத்து விஷ வாயு தாக்கியுள்ளதோடு அவரைக் காப்பாற்றவென் முருகேசு பாலசுப்பிர மணியம் இறங்கியதாகவும் பின் அவரும் விஷ வாயுவால் தாக்கப்பட்டு நீரில் மூழ்கி இறந்ததாகவும் மரண விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

விஷ வாயு தாக்கத்திற்குள்ளாகி மரணமடைந்த இவர்கள் இருவரும் மைத்துனர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஐ.தே.க.அதிருப்திக் குழுவில் மேலும் பத்து உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்திக் குழுவில்மேலும்பத்துஉறுப்பினர்கள் இணைய இருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.நாளை நான்கு உறுப்பினர்கள் அரசுடன் சேர்ந்துள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்தி குழுவுடன் இணையவுள்ளதாக அறிய முடிகிறது.

ரஞ்சித் மத்துவ பண்டார, ஜீ.ஹெரிசன், சந்திராணி பண்டார,சம்பிக்க ஆகிய உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷவை ஏற்கனவே சந்தித்து அரசுடன் இணைவதற்கு உடன்பாடு ஒன்றிற்கு வந்ததாகவும் மேலும் ஆறு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் இந்த வார இறுதியில் அரசுடன் இணைய இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ச)

## சுதந்திரதினக் கொண்டாட்டங்கள்...

தளபாடங்களுடனும் அணிவகுத்து நிற்க, தேசிய கீதம் இசைக்கப்பட்டு அனைவரும் மரியாதை செலுத்த தேசியக் கொடியினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றினார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், படை உயர் அதிகாரிகள் ,இராஜதந்திரிகள், அரச அதிகாரிகள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கலை நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் முப்படைகளினதும் சக்தியையும்,ஆயுத பலத்தையும் வெளிப்படுத்தும் நோக்கில் படைகளின் அணிவகுப்புக்களும் இடம் பெற்றன. (ச-3)

## சிறுவர்கள் படையணியில்...

கொண்டு வரப்பட்ட தமிழீழ சிறுவர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் காத்திரமான செயற்பாடுகளை தமிழீழ சிறுவர் பாதுகாப்புப் பிரிவு முன்னெடுத்து வரும் நிலையில் ஏற்கனவே ஈட்டப்பட்ட முன்னேற்றங்களையும், சிறுவர் ஆட்சேர்ப்புக்களை தடுப்பதில் இருக்கக் கூடிய நடைமுறைச் சிக்கல்களையும் ஐக்கிய நாடுகள்சிறுவர் நிதியமும் ஏனைய ஐ.நா.துணை நிறுவனங்களும் கவனத்தில் கொள்ள தவறக்கூடாது என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒரு புறம் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசாங்கத்தின் திரைமறைவு ஆதரவுடன் மாற்றுக்குழுக்களால் சிறுவர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும் அதேவேளை தென் தமிழீழத்தில் சிறுவர் ஆட்சேர்ப்புக்களை கட்டுப்படுத்துவதற்கு தமிழீழ சிறுவர் பாதுகாப்பு பிரிவு மேற்கொள்ளும் முயற்சிகள், தொடர்ச்சியாக அரசாங்கப்படைகள் நிகழ்த்தும் தாக்குதல்களால் கடினமாகி இருப்பதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவற்றை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமும் ஏனைய ஐ.நா.துணை நிறுவனங்களும் கவனத்தில் கொள்ளத்தவறும் பட்சத்தில் சிறுவர் உரிமைகளை ஊக்குவிக்கும் முயற்சிகள் தோல்வியடைவதோடு சிறுவர் ஆட்சேர்ப்புக் குறித்த விதிமுறைகள், பரப்புரை ஆயுதமாக மாறும் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் குறிப்பிட்டுள்ளனர். (ச-5)

## இந்திய...

கோடிக்காடு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கோடியக்கரையிலிருந்து ஒரு படகில் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். வெள்ளிக்கிழமை காலை சுமார் 5 மணியளவில் தென்கிழக்குத் திசையில் அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் கயிறு,தடி ஆகியவற்றைக் கொண்டு மீனவர்களைத் தாக்கி எச்சரித்தனர்.

மேலும் மீனவர் கள் பிடித்து வைத்திருந்த சுமார் 30 கிலோ மீன்களை அவர்கள் பறித்துச் சென்றனர் என வேதாரணியம் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## சுதந்திரதினத்தை முன்னிட்டு...

னரின் முகாம்கள் மற்றும் வீதிகளில் அமைந்துள்ள காவல் அரண்களிலும் தேசியக் கொடிகள்பறக்கவிடப்பட்டிருந்தன .

வழமையை விட நேற்று இராணுவத்தினர் தமது வீதிசோதனைகளை முடுக்கிவிட்டிருந்தமையும் நகரில் மக்களின் நடமாட்டம் மிகவும் குறைந்தளவிலேயே காணப்பட்டதையும் அவதானிக்கப்படக்கூடியதாக இருந்தது.

இதேவேளை வீதிகளில் சென்ற வாகனங்கள், ஆட்டோக்கள் என்பவற்றிலும் தேசியக் கொடிகட்டியிருந்ததுடன் சில கடைகளிலும் ஸ்ரிக்கரினாலான தேசியக்கொடி ஒட்டப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க சில இடங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்க தினமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. (எ-5)

## சர்வகட்சிக்கூட்டங்களுக்கு...

மைப்பை தமது அரசுடன் இணை யுமாறு பகிரங்க அழைப்பு விடுத்தார்.

இவ் அழைப்புத் தொடர்பாக வலம்புரிக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு மக்கள் உணவு உட்பட அத்தியாவசிய தேவைகள் கிடைக்காது தவித்தபோது அவற்றை அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நான்கு முறை சந்தித்து வேண்டுகோள் விடுத்தோம்.

எனினும் அவற்றை உடனடியாக மேற்கொள்ளக்கூடியதாக இருந்தபோதும் அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு என எம்மை ஏற்றுக்கொண்ட போதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமை யிலான அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்காகக்கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகளில் ஒன்றுக்கேனும் அழைப்பு விடவில்லை.

உண்மையாக தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் தீர்வுத்திட்டத்தை காண்பதற்கு ஜனாதிபதி தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை இச் சர்வகட்சி மாநாட்டுக்கு அழைத்து எமது கருத்தை கேட்டிருக்கவேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் தெற்கின் அரசியல் கட்சிகளை கூட்டி தமது அரசியல் இலாபத்திற்காகவும் சர்வதேச சமூகத்திற்கு தாம் நிரந்தர சமாதானத்தை உருவாக்க பாடுபடுவதென காண்பிப்பதற்குமாக சர்வகட்சி மாநாடு என்ற ஒரு கூட்டத்தை கூட்டுகிறார் என்றார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய 3இல் 2 பெரும்பான்மையைக் கொண்ட அரசை ஜனாதிபதி அமைத்தார்.

இரு கட்சிகளும் இணைந்து நல்லதொரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்திருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தால் நாமும் அதற்கு வாக்களித்திருப்போம்.

ஆனால் ஐ.தே.க.எம்பிக்களை தனது பக்கம் இழுத்து அரசியல் இலாபத்தை ஜனாதிபதி தேடிக்கொண்டுள்ளார் என அவர் மேலும் கூறினார். (ச-3,5)

## ஷெல் வீழ்ந்து...

இதனைத் தொடர்ந்து நேற்று பிற்பகல் 2.30 மணிதொடக்கம் மீண்டும் விடுதலைப் புலிகளின் பகுதிகளை நோக்கி ஆட்லறி எறிகணைத் தாக்குதல்களும் பல்குழல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன. (ச-3,5)

## இரத்தத்திற்கு...

அவர்,குறித்த வகையுடைய குருதிக் கொடையாளர்கள் உடனடியாக 222 3063 என்ற இரத்த வங்கியின் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இரத்தவகை தெரியாதவர்கள் இரத்தப்பரிசோதனை மேற்கொண்ட பின் இரத்ததானம் செய்யலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)


## மரண அறிவித்தல்

## திரு.கந்தையா செல்வராசா

(மாத்தையா)



காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தருமான (வவுனியா வடக்கு பிரதேசசபை,நெடுங்கேணி), திரு. கந்தையா செல்வராசா (மாத்தையா) 01.02.2007 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய திரு.கந்தையா திருமதி பொன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், திருமதி பாக்கியலட்சுமியின் பாசமிகு கணவரும், லோகேந்திரன் (அவுஸ்திரேலியா), ராஜேந்திரன்(லண்டன்), லோகினி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், காலஞ்சென்ற திரு.திருமதி நாகலிங்கம், வள்ளியம்மையின் (லிங்கம் ஸ்ரோஸ்) மருமகனும், இராஜரட்ணம் (லண்டன்), சரஸ்வதி (யாழ்ப்பாணம்), துரைராசா (லண்டன்), ஜெயசோதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரரும், செல்வமலர் (லண்டன்), தருமபாலன் (யாழ்ப்பாணம்), ராஜேஸ்வரி (லண்டன்), ஜெயந்திரன் (அவுஸ்திரேலியா), தருமலிங்கம், சுந்தரலிங்கம், மகாலிங்கம் (நெடுங்கேணி), அமிர்தலிங்கம் (லண்டன்), ரதிதேவி, சரோஜினிதேவி, தனலட்சுமி, பத்மசோதி, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தி, சிவா, சற்குணராஜா, சாலினி, மாலினி ஆகியோரின் பெரியதகப்பனாரும், விமலராஜன், காலஞ்சென்ற விமலரூபன், விமலாகரன், விமல்சாந்தன், விமலக்ஷன், ஜெயகிஷான் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (05.02.2007) காலை 8.15 மணியளவில் கொழும்பு ஜெயரட்ண மலர் சாலையில் (பொரளை) இடம் பெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

கந்தையா இராஜரட்ணம்(சகோதரன்)
மனைவி, பிள்ளைகள்.

23,St.Peters Place,Colombo-04
Phone:- 077 9788258
077 6513791

(611)


## தமிழ்க்கூட்டமைப்பை அரசில்...

அவர் ஆற்றிய உரை வருமாறு;

நண்பர்களே, கடந்த சுதந்திரதின வைபவத்தின்போது நான் உங்களிடம் விடுத்த வேண்டுகோள் உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இலங்கை தேசத்தின் உத்தமமான அபிலாசைகளுக்காக நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்பதே அந்த வேண்டுகோள்.

அதற்காக இந் நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும்,இயக்கங்களுக்குமிடையே பொதுவான இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள எமது அரசாங்கம் பாடுபட்டது.

எல்லாவித பேதங்களையும் ஒதுக்கித் தள்ளி நாட்டின் பொதுநன்மைக்காக பாடுபடுகின்ற அரசியல் சமூகம் ஒன்றை உருவாக்க நாம் பாடுபட்டோம்.

இன்று நேர்மையான உணர்வுடன் கண்பார்வையை சுழற்றுகையில் தோற்றம் பெறுகின்ற அந்த புதிய அரசியல் சமூகத்தின் முன்னறிவிப்பு எல்லாத்திசைகளிலும் உங்களுக்குத் தோன்றுகின்றது.

தேசிய நிகழ்ச்சி நிரலில் தனது குடும்பத்திற்கு, இனத்திற்கு, மதத்திற்கு அல்லது கட்சிக்கு முன்னால் தாய்நாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்குமாறு இந்த வரலாற்று மிக்க தினத்தில் எல்லா ஜனநாயக சக்திகளிடமும் நான் மீண்டும் வேண்டுகோள் விடுகின்றேன்.

இதுவரை எம்முடன் இணைவதற்கோ அல்லது இணக்கப்பாட்டிற்கோ வராத பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடமும் இம் மேடையில் இருந்து நான் இந்த வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

வடக்கின் அப்பாவித் தமிழ் மக்கள் பயங்கரவாத அச்சுறுத்தல்களில் இருந்தும் வன்முறைகளின் கீழ்த்தரமான விளைவுகளில் இருந்தும் மீட்டெடுப்பதற்கும் வடக்கில் விடுதலையை உதயமாக்கிக்கொள்ள முடிவதும் எம்முடன் கைகோத்து ஒன்று சேர்வதன் மூலமாக மாத்திரமே முடியுமாக இருக்கும்.

நீங்கள் பீதியினாலும், மனவேதனையினாலும் இருப்பீர்கள் ஆயின் மானிடர் என்ற வகையில் உங்களுக்கான சுதந்திரம் இல்லையாயின் நீங்கள் கடைப்பிடிப்பதாக சொல்லுகின்ற அரசியல் கருத்துக்கள் எந்தளவு ஜனநாயக ரீதியாக இருந்தாலும் அவர்கள் எவரும் அடிமைத்தளையற்ற மனிதர்கள் அல்ல என்பதை நான் நேர்மையாக அவர்களுக்கு கூறிக்கொள்ளவேண்டும்.58,59 சுதந்திர தின காலப் பகுதிக்கிடையில் முக்கியமானதும் தேசத்தின் தேவையானதுமான சமாதானத்திற்காக நாம் பலவற்றை அர்ப்பணித்தோம்.

மாவிலாறு அணை மூடப்பட்டு 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்ட சந்தர்ப்பம் வரை எந்தவிதமான ஆத்திரமூட்டும் சம்பவங்களுக்கும் நாம் இரையாகவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசையை விட்டுச் செல்லும்போது கூட நாம் நேர்மையுடன் அங்கு அமர்ந்திருந்தோம். அது எமது கையாலாகாத தன்மை யா? இல்லவே இல்லை.அவ்வாறு தான் சமாதானத்திற்கான எமது அர்ப்பணிப்பை நாம் வெளிப்படுத்தினோம்.

விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை பெற்றுக்கொடுக்க நாம் தயாராக இல்லை. ஆனாலும் ஆகக்குறைந்தது ஆனந்தசங்கரி அல்லது டக்ளஸ் தேவானந்தா கூறுவதை செவிமடுக்கக்கூடிய வகையில் நாம் நேர்மையாக இருக்கவேண்டும். நியாயமானவர்களாக இருக்கவேண்டும்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலின்போது நீங்கள் என்மீது வைத்த நம்பிக்கைக்கு எந்த விதமான பங்கமும் ஏற்படாமல் பிரிவினவாதத்தை தோல்வியடையச்செய்து சந்தர்ப்பவாத அரசியலை ஓய்வுபெறச்செய்து இந்தப் புண்ணிய பூமியின் கௌரவத்தையும், சௌபாக்கியத்தையும் உறுதிப்படுத்துவதற்காக என்னால் இயன்றளவு அர்ப்பணிப்புடன் செயல்படுவேன் என்பதை உங்கள் முன் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.எமது அரசாங்கத்திற்குள்ள பலம், தைரியம், துணிச்சல் என்பவற்றின் மீதுள்ள ஆகக்கூடிய நம்பிக்கையின் மீதே நான் இவ்வாறு குறிப்பிடுகின்றேன்.

அதேபோன்று மகிந்த சிந்தனையை செயற்படுத்துவதற்கு பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எமது நேச சக்திகளிடமும் , ஏனைய சக்திகளிடமும் தாய்நாட்டின் அபிமானத்திற்காகவும் சௌபாக்கியத்திற்காகவும் எம்முடன் கைகோர்க்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.கடன்களற்ற அடிபணியாத எமது நாட் டிற்கே பொருத்தமான கொள்ளை ஒன்றை முன்னெடுத்துள்ள எம்முடன் கைகோர்க்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நண்பர்களே,நியாயத்தை அடிப்படையாக வைத்தே மக்களின் எதிர்ப்பு காட்டப்படுகின்றது என்ற உண்மையை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எனது அரசியல் வாழ்க்கையில் நான் புரிந்து வைத்துள்ளேன்.

சுதந்திரம் என்பது ஒரு தேசத்தின் எதிர்கால வெற்றிப்பாதையாகும். சுதந்திரம் என்பது கிடைத்த வெற்றிகளை பாதுகாப்பதாகும். சுதந்திரம் என்னும் பாதையிலே தேசத்தின் எதிர்கால வெற்றிகளுக்காக நாம் ஒன்றுபட்டு செயற்படுவோம்! அர்ப்பணிப்போம்! வெற்றிபெறுவோம்! எமது உத்தமமான தாய்நாட்டுக்குரிய மகத்துவத்தை நாமே பெற்றுக்கொடுப்போம் என ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்துள்ளார். (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.